**O.S.No. 120/2018**

**PW1 : சந்திரசேகர்** தேதி 20.08.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் வாதி என்னுடைய மனைவி. என் மனைவிக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என் மனைவிக்காக சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறவில்லை. பிராதில் என் மனைவி அவரை சுவீகாரம் எடுத்து கொண்ட விவரத்தை அவரது கணவராக எனக்கு தெரியும் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த இடத்தில் என் மனைவின் எந்த வயதில் ஓ.ஏ.கே நாச்சிமுத்துமுதலியார் என் மனைவியை சுவீகாரம் எடுத்தார் என்று குறிப்பிட்டு பிராதில் சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லியிருக்கிறார். 14.4.1964 ல் சென்னிமலையில் சாவித்திரியின் தகப்பனார் இல்லத்தில் வைத்து புரோகிதர் மூலம் தத்து எடுத்து கொண்டதாக சொல்லியுள்ளேன். அது சம்மந்தமான ஆவணம் சாட்சியம் உள்ளதா என்றால் சட்டபடியான ஆவணம் இல்லை. ஆனால் சாட்சிகள் இருக்கிறார்கள். என் மனைவி தாக்கல் செய்த பிராதில் மேற்படி சாட்சிகள் யார் யார் என்று பெயர் முகவரியுடன் சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லவில்லை. சொல்லாததற்கு ஏதேனும் குறிப்பிடும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. வேறு எந்த பதிவு ஆவணங்களும் தத்து எடுத்ததற்கு இல்லை என்றால் பதிவு ஆவணம் எதுவும் இல்லை. ஓ.ஏ.கே கிருஷ்ணமுதலியாருக்கு ஓ.ஏ.கே நாச்சிமுத்து முதலியார், ஓ.ஏ.கே.மாரியப்பன் ஆகிய இரண்டு ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களுடைய சகோதரிகள் பி.தனலட்சுமி, பி.தங்கம்மாள், பி.ராமலட்சுமி, பி.காமாட்சி ஆகிய 4 பெண் மக்கள் என்றால் சரிதான். ராமலட்சுமி தான் 2ம்

பிரதிவாதியின் பிறப்பின் அடிப்படையிலான தாயார் என்றால் சரிதான். ஓ.ஏ.கே நாச்சிமுத்து முதலியாரின் சகோதரி. ஓ.ஏ.கே நாச்சிமுத்து முதலியாருடைய மனைவி தான் ராஜம்மாள். ஓ.ஏ.கே மாரியப்பனுக்கு வசந்த கோகிலம் என்ற மகளும் வாதி சாவித்திரியும், மல்லிகா, அருணா, சணமுகவேலாயுதம், சாந்தி, விஜயகுமாரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ராஜம்மாளின் சகோதரர் தான் 2 ம் பிரதிவாதி வெங்கடேசன் என்றால் சரிதான். மேற்சொன்ன யாருக்கும் இடையில் எனக்கு இரத்த சம்மந்தமான உறவு கிடையாது என்றால் சரிதான். என் மனைவிக்கு தான் மேற்படியார்கள் சொந்த முறை வருகிறது. என் திருமணத்தின் போது என் வயது 28. என் மனைவிக்கு வயது 20. எந்த வருடத்தில் திருமணம் ஆனது என்றால் 1976 ல் எங்களுக்கு திருமணம் ஆனது. 1964 ல் என் மனைவியின் வயது 8. சுப்புராய முதலியார் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விபட்டிருக்கிறேன். சுப்புராய முதலியாருக்கு 3 மனைவிகள் என்றால் எனக்கு தெரியாது. முதல் மனைவிக்கு குழந்தைகள் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. 2 ம் மனைவியாக ஓ.ஏ.கே கிருஷ்ணசாமி முதலியாரின் சகோதரியை சுப்புராய முதலியார் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. வேறு பெண்ணை திருமணம் செய்தார். சுப்புராய முதலியாரின் 2 ம் மனைவி மூலம் 1 ம் பிரதிவாதி ராஜம்மாள் மற்றும் ஒரு தங்கவேல் ஆகியோர் பிறந்தார்கள் என்றால் சரிதான். 3 ம் மனைவி பெயர் ரத்தின பொன்னம்மாள். ரத்தின பொன்னம்மாளுக்கும் சுப்புராய முதலியாருக்கும் இடையே கமலா, வி.எஸ் பரமசிவம் ( 2 ம் பிரதிவாதியின் தந்தை) ஜானகி, வி.எஸ்.லோகநாதன், வி.எஸ் சண்முகம், வி.எஸ்.ராஜகோபால் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்களுக்கும் எனக்கும் இரத்த சம்மந்தமான உறவு இல்லை என்றால் சரிதான். 14.4.1964 ல் தத்து எடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். மாரியப்பன் எனக்கு ஒன்றுவிட்ட தாய் மாமா. 1964 ல் என்னுடைய

வயதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னுடைய மனைவி தாக்கல் செய்த பிராதில் என் கணவர் சுவீகார சடங்கில் கலந்து கொண்டதாக சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. நாச்சிமுத்து முதலியார் மற்றும் மாரியப்ப முதலியார் ஆகியோருக்கு இடையில் பாகப்பிரிவினை வழக்கு ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. அந்த பாகப்பிரிவினையில் என் மனைவிக்கு சொத்துகள் ஒதுக்கப்பட்டதா என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பற்றிய விவரங்களை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.